**செய்தி வெளியீடு எண்: 350** **நாள்: 17.06.2019**

## செய்தி வெளியீடு

### 1. சுற்றுப்புற காற்றின் தர கண்காணிப்பு

தமிழகத்தின் முக்கிய நகரங்களில், தொழிற்சாலைகளிலிருந்து வெளியேற்றப்படும் நச்சு புகை மற்றும் வாகன புகையினால், சுற்றுப்புற காற்றின் தரம் பாதிக்கப்படுகிறது. தமிழ்நாட்டின் முக்கிய நகரங்களில் சுற்றுப்புற காற்றின் தரத்தினை கண்காணிக்கும் வண்ணம் மொத்தம் 28 இடங்களில் தேசிய காற்று தர கண்காணிப்பு திட்டத்தின்கீழ் அதிக கொள்ளளவு காற்று மாதிரி சேகரிப்பான் கருவி கொண்டு காற்றின் தரத்தினை வாரியம் கீழ்கண்ட இடங்களில் கண்காணித்து வருகின்றது.

| வரிசை எண் | நகரம் | இடம் | நில பயன்பாடு | காற்று மாசு கண்காணிப்பு காரணிகள் |
|---|---|---|---|---|
| 1 | சென்னை | கத்திவாக்கம் | தொழிற்சாலைப்பகுதி | 10 மைக்ரான் மற்றும் 2.5 மைக்ரான் அளவிற்குட்பட்ட நுண்துகள்கள், கந்தகடை ஆக்சைடு, நைட்ரஜன் ஆக்சைடு |
| | | மணலி | தொழிற்சாலைப்பகுதி | |
| | | திருவொற்றியூர் | தொழிற்சாலைப்பகுதி | |
| | | கீழ்பாக்கம் | வணிக மற்றும் வாகனம் நெரிசல் பகுதி | |
| | | தியாகராய நகர் | வணிக மற்றும் வாகனம் நெரிசல் மிக்க பகுதி | |
| | | நுங்கம்பாக்கம் | வணிக மற்றும் வாகனம் நெரிசல் மிக்க பகுதி | |
| | | அண்ணாநகர் | குடியிருப்புப்பகுதி | |
| | | அடையார் | குடியிருப்புப்பகுதி | |
| 2 | கோவை | மாவட்ட ஆட்சியர் அலுவலகம் | கலப்பு குடியிருப்பு பகுதி | |
| | | பொன்னையாராஜபுரம் | குடியிருப்புப்பகுதி | |
| | | சிட்கோ கட்டிடம் | தொழிற்சாலைப் பகுதி | |
| 3 | மதுரை | நெடுஞ்சாலைத்துறை கட்டிடம் | குடியிருப்புப் பகுதி | |
| | | சுசி கார்ஸ் ட்ரக்ஸ் (பி) லிட் | தொழிற்சாலைப் பகுதி | |
| | | மதுரை மாநகராட்சி அலுவலகம் (தெற்கு) | கலப்பு குடியிருப்பு பகுதி | |
| 4 | சேலம் | சௌடேஸ்வரி கல்லூரி | கலப்பு குடியிருப்பு பகுதி | |
| 5 | திருச்சி | காந்தி மார்க்கட் | வணிகப்பகுதி | |
| | | மெயின்கார்டு கேட் | போக்குவரத்துப்பகுதி | |
| | | பிஷப் ஹீபர் கல்லூரி | கலப்பு குடியிருப்பு பகுதி | |

| | | | | |
|---|---|---|---|---|
| | | பொன்மலை | குடியிருப்புப்பகுதி | |
| | | மையப்பேருந்து நிலையம் | போக்குவரத்துப்பகுதி | |
| 6 | தூத்துக்குடி | இராஜா ஏஜென்சீஸ் | தொழிற்சாலைப்பகுதி | |
| | | சிப்காட் | தொழிற்சாலைப்பகுதி | |
| | | ஏ.வி.எம். கட்டிடம் | கலப்பு குடியிருப்பு பகுதி | |
| 7 | மேட்டூர் | இராமன் நகர் | குடியிருப்பு பகுதி | |
| | | சிட்கோ | தொழிற்சாலைப்பகுதி | |
| 8 | கடலூர் | ஈச்சங்காடு கிராமம் | குடியிருப்பு பகுதி | |
| | | இம்பீரியல் கல்லூரி | வணிகப்பகுதி | |
| | | சிப்காட் | தொழிற்சாலைப்பகுதி | |

இவ்விடங்களில் வாரம் இருமுறை 24 மணி நேரமும் கண்காணிப்பு நடத்தி, மாதிரிகள் எடுக்கப்பட்டு சுவாசிக்கும் போது உட்செல்லக்கூடிய 10 மற்றும் 2.5 மைக்ரான் அளவுக்குட்பட்ட மிதக்கும் நுண்துகள்கள் ($PM_{10}$),($PM_{2.5}$), சல்பர் டை ஆக்ஸைடு மற்றும் நைட்ரஜன் டை ஆக்ஸைடு ஆகிய வாயுக் கழிவுகளின் அளவுகள் கண்டறியப்படுகிறது. அதன் விவரம் அட்டவனையில் இணைக்கப்பட்டுள்ளது 2018–2019 ஆண்டுக்கான சல்பர்–டை–ஆக்ஸைடு மற்றும் நைட்ரஜன் டை ஆக்ஸைடுகளின் சராசரி அளவுகள், கண்காணிப்பு நடத்திய அனைத்து இடங்களிலும், நிர்ணயிக்கப்பட்ட காற்றுத்தர அளவுகளுக்குட்பட்டு இருப்பது கண்டறியப்பட்டுள்ளது. சுவாசிக்கும் போது உட்செல்லக்கூடிய மிதக்கும் நுண்துகள்களின் அளவு 10 மைக்ரானுக்குட்பட்டவை சில இடங்களில் நிர்ணயிக்கப்பட்ட ஆண்டு சராசரி அளவான 60 மைக்ரோகிராம்/கனமீட்டர் அளவைவிட அதிகமாக இருப்பது கண்டறியப்பட்டுள்ளது. நுண்துகள்கள் அதிகமாக இருப்பதற்கு முக்கிய காரணம் வாகன போக்குவரத்தாகும். சாலையில் உள்ள மண் மற்றும் தூசுக்கள் வாகனங்கள் செல்லும்போது மேலெழுவதால் தான் காற்றில் கலந்துள்ள துகள்களின் ($PM_{10}$) அளவு நிர்ணயிக்கப்பட்ட அளவைவிட தூத்துக்குடியில் சற்று கூடுதலாக உள்ளது. இதை தடுக்கும் பொருட்டு தமிழ் நாடு மாசு கட்டுப்பாடு வாரியம் விரிவான ஆய்வுகளை மேற்கொண்டு காற்று மாசின் அளவை கட்டுப்படுத்த திட்ட அறிக்கை (Action Plan) தயாரிக்கப்பட்டு மத்திய மாசு கட்டுப்பாடு வாரியத்தின் ஒப்புதல் பெறப்பட்டுள்ளது. அதனை நிறைவேற்ற பிற அரசு / அரசு சாரா நிறுவனங்களுடன் இணைந்து தகுந்த நடவடிக்கைகளை தமிழ் நாடு மாசு கட்டுப்பாடு வாரியம் மேற்கொண்டு வருகிறது. மேலும் இந்த தகவல்கள் வாரிய இணையத்தளத்தில் பதிவு செய்யப்படுகிறது.

## 2. தொடர் சுற்றுப்புற காற்று தர கண்காணிப்பு நிலையங்கள்

சுற்றுப்புற காற்று தரத்தினை, மனிதர்கள்மூலம் கண்காணிப்பு செய்வதுடன் தானியங்கி மூலம் தொடர்ந்து கண்காணிக்கும் வண்ணம், வாரியம் 9 இடங்களில் தானியங்கி தொடர் சுற்றுப்புற காற்று தர கண்காணிப்பு நிலையங்களை அமைத்துள்ளது. அதன்படி சென்னையில் 5 இடங்களில் அதாவது கோயம்பேடு, ராயபுரம், பெருங்குடி (சாய் நகர்), கொடுங்கையூர், மணலி ஆகிய இடங்களிலும், கும்மிடிப்பூண்டி சிப்காட் வளாகம், தூத்துக்குடி சிப்காட் வளாகம், பெருந்துரை சிப்காட் வளாகத்திலும் மற்றும் கோயம்புத்தூரிலும் அமைக்கப்பட்டு இயக்கத்தில் உள்ளன. இந்நிலையங்கள் மூலம் காற்றில் கலந்துள்ள 10 மைக்ரான் அளவுக்குட்பட்ட நுண்துகள்கள், 2.5 மைக்ரான் அளவிற்குட்பட்ட நுண்துகள்கள், சல்பர் டை ஆக்ஸைடு, நைட்ரஜன் டை ஆக்ஸைடு, ஓசோன், கார்பன் மோனாக்ஸைடு மற்றும் பென்சீன் ஆகிய வாயு காரணிகள் தொடர்ந்து கண்காணிக்கப்பட்டு வருகின்றன. இத்தொடர் கண்காணிப்பு நிலையங்களின் முக்கிய அம்சங்கள்

i. ஒவ்வொரு 15 நிமிட இடையில் காற்றின் தரம் பதிவு செய்யப்படுகின்றது.
ii. காற்றின் தரம் நிர்ணயிக்கப்பட்ட தர அளவினை விட அதிகரிக்கும் போது உடனடியாக தகவல் தெரிவிக்கப்படுகிறது.
iii. கருவியின் அளவிடும் திறன் மற்றும் காற்று காரணிகள் அளவீட்டினைக் கொண்டு பதிவு செய்யப்பட்ட தகவல்களை சரிபார்க்கப்படுகிறது.
iv. தொடர் கண்காணிப்பு நிலையங்கள் மாநிலத்தில் எவ்விடத்திலிருந்தாலும் அவற்றில் பதிவு செய்யப்படும் தகவல்களை ஒரு பொதுவான அமைப்பின் கீழ் கொண்டு வரப்பட்டு கண்காணிப்பு செய்யலாம்.
v. இந்நிலையங்களில் பதிவு செய்யப்படும் தகவல்களை கைப்பேசி மற்றும் தொலைப்பேசி வாயிலாக தெரிந்து கொள்ளும் வசதியை ஏற்படுத்தி கொள்ளலாம்.
vi. முந்தைய மற்றும் தற்போதைய காற்று தரம் பற்றிய தகவல்களை உடனடியாக தேவையான வடிவில் பெற்றுக் கொள்ளலாம்.
vii. இதில் உள்ள மென்பொருளைக் கொண்டு ஓர் இடத்தின் சுற்றுப்புற காற்று தரம் பற்றி ஒரு மணி நேரம், எட்டு மணி நேரம், மாதம் மற்றும் வருடம் ஆகிய கால இடைவெளியில் சராசரி அளவுகளை மற்ற இடங்களின் காற்று தரத்துடன் ஒப்பிட்டுப் பார்க்கலாம்.

**3. நடமாடும் தொடர் காற்று தர கண்காணிப்பு நிலையம்**

தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம், சுற்றுச் சூழல் காற்று தரத்தை தொடர்ந்து கண்காணிக்கும் வண்ணம் ஒரு நடமாடும் தொடர் சுற்றுச் புற காற்று தர கண்காணிப்பு நிலையத்தினை மார்ச் 2016–ல் அறிமுகப்படுத்தியுள்ளது. இந்த நடமாடும் நிலையத்தின் மூலம் காற்றில் கலந்துள்ள கந்தக டை ஆக்ஸைடு, நைட்ரஜன் டை ஆக்ஸைடு, அம்மோனியா, ஓசோன், கார்பன் மோனாக்ஸைடு, பென்சீன், டொலுவின், ஈத்தைல் பென்சீன், சைலீன், காற்றில் 10 மைக்ரான் அளவிற்குட்பட்ட நுண் துகள்கள் மற்றும் 2.5 மைக்ரான் அளவிற்குட்பட்ட நுண் துகள்கள் ஆகியவற்றை அளவீடு செய்யலாம். மேலும், இந்நிலையத்தில் காற்றின் திசை, காற்றின் வேகம், சுற்றுப்புற வெப்ப நிலை, ஈரப்பதம், சூரிய கதிர்வீச்சு, மழை அளவு, காற்றின் அழுத்தம் போன்ற வானிலை சம்பந்தமான தகவல்களை அறியும் கருவிகள் உள்ளன. இந்த நடமாடும் நிலையத்தின் மூலம் சென்னை மாநகரின் அதிக மாசு பகுதிகள் மற்றும் இதர பகுதிகளின் காற்றின் தரத்தினை அளவீடு செய்யலாம். இந்தியாவில் உள்ள மாநில மாசு கட்டுப்பாடு வாரியங்களில் முதன் முதலில் நடமாடும் காற்று தர கண்காணிப்பு நிலையத்தை ஏற்படுத்திய பெருமை தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியத்தையே சாரும்.

மேலும் தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம் 25 தானியங்கி தொடர் சுற்றுச் புற காற்று தர கண்காணிப்பு நிலையங்களை மாவட்டங்களில் நிறுவதற்கு தேவையான நடவடிக்கைளை எடுத்துவருகிறது. இந்த தொடர் சுற்றுச் புற காற்று தர கண்காணிப்பு நிலையங்கள் மாவட்டங்களில் உள்ள கல்லூரி வளாகங்களில் அமைக்கப்பட உள்ளது. இதன் மூலம் பெறப்படும் தகவல்கள் பொது மக்களும், கல்லூரி மாணவர்களும் பயன்படுத்தும் வகையில் கண்காணிப்பு நிலையங்கள் அமைக்கப்படுகிறது.

**4. காற்று தர கண்காணிப்பு மையம் (Care Air Centre)**

தொழிற்சாலை புகைபோக்கியிலிருந்து வெளிவரும் வாயு கழிவுகளின் தரத்தையும் மற்றும் தொழிற்சாலையினை சுற்றியுள்ள காற்றின் தரத்தையும் கண்காணிக்கும் பொருட்டு சென்னையில் உள்ள தலைமை அலுவலகத்தில் ஒரு காற்று தர கண்காணிப்பு மையத்தினை வாரியம் அமைத்துள்ளது. சிகப்பு மற்றும் 17 வகையான அதிக மாசு படுத்தும் தொழிற்சாலைகள் இம்மையத்துடன் இணைக்கப்பட்டு வாரத்தின் ஏழு நாட்களிலும் 24 மணிநேரமும் தொடர்ச்சியாக கண்காணிக்கப்பட்டு வருகின்றன. இத்தகைய மையம் இந்தியாவில் வேறெங்கும் இல்லாத தனித்தன்மை வாய்ந்ததாகும். தொழிற்சாலையிலிருந்து வெளிப்படும்

வாயுக்களின் தன்மை, கழிவுநீர் தன்மை மற்றும் சுற்றுப்புறக் காற்றின் தன்மை குறிப்பிட்ட தர அளவினை மீறும் பொழுது, அத்தொழிற்சாலைக்கும், மாவட்ட சுற்றுச்சூழல் பொறியாளர் மற்றும் உறுப்பினர் செயலருக்கும் உடன் நிவாரண நடவடிக்கை எடுக்கும் பொருட்டு குறுந்தகவல் மற்றும் மின்னஞ்சல் தானாக அனுப்பப்படும். மே 31, 2019 வரை 340 தொழிற்சாலைகள் இம் மையத்துடன் இணைக்கப்பட்டுள்ளன. மேலும் குறிப்பிட்ட தர அளவினை மீறும் தொழிற்சாலைக்கு சென்று ஆய்வு நடத்தப்பட்டு அந்த தொழிற்சாலைகள் இயங்குவது தற்காலிகமாக நிறுத்தப்படும்.

**5. விழிப்புணர்வு நடவடிக்கை:**

பண்டிகை காலங்களில் குறிப்பாக தீபாவளி மற்றும் போகி பண்டிகைகளின் போது காற்று மாசினை கட்டுப்படுத்தும் பொருட்டு பல்வேறு விழிப்புணர்வு பிரசாரங்கள் வாரியம் மூலம் மேற்கொள்ளப்பட்டு பொதுமக்களுக்கு காற்று மாசுக்கட்டுப்பாட்டின் அவசியம் குறித்து விளக்கப்படுகிறது மேலும் தீபாவளி மற்றும் போகி பண்டிகைகளின் காலங்களில் காற்று மாசு ஆய்வினை தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம் தமிழகத்தில் பல பகுதிகளில் மேற்கொண்டு காற்றின் தன்மையை கண்காணித்து வருகிறது.

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**